# JUICE – 2025

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சர்வதேச ஆய்வரங்கின் ஒரு பகுதியாக

## ஆறாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு – 2025

**காலம்: 2025 ஆனி**

**கருப்பொருள்:**

**தமிழ் மொழி, இலக்கியச் செழுமையில் ஆழ்வார் பாசுரங்கள்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் 'கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தின்' அனுசரணையில் அனைத்துலகத் தமிழியல் ஆய்வுமாநாட்டினை நடத்தி வருகின்றது. அதனுடைய நீட்சியாக நடப்பாண்டில் ஆறாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டினை, **"தமிழ் மொழி, இலக்கியச் செழுமையில் ஆழ்வார் பாசுரங்கள்"** என்ற கருப்பொருளில் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் பக்தி இலக்கியம் என்பது பிரதானமான வகிபாகத்தினைப் பெற்றுள்ளது. 'பக்தியின்மொழி தமிழ்' என்று சிறப்பிக்கும் வகையில் உலகமொழிகளுக்குள் முன்னுதாரணமான ஒரு மொழியாகத் தமிழ்மொழி இன்றும் விளங்கி வருகின்றது. தமிழிலக்கியத்தின் உள்ளடக்கம், வடிவம், மொழி, உணர்த்துமுறை முதலான விடயங்களை முதல் மூன்று ஆழ்வார்கள் உள்ளிட்ட பன்னிரு ஆழ்வார்களும் மிகவும் செப்பமான ஒரு முறையில் தமது பாசுரங்களில் கையாண்டுள்ளனர். இவர்களுடைய பங்களிப்புப் பிற்காலப் பக்தி இலக்கிய மரபின் எழுச்சிக்கும் செழுமைக்கும் மிகப்பெரும் பங்களிப்பினை வழங்குவதாக அமைந்து காணப்படுகின்றது.

பல்வேறு துறைகளிலான இந்த ஆழ்வார்களின் பங்களிப்பினை இனங்கண்டு வெளிப்படுத்துவதற்கு வசதியாக இந்தக் கருப்பொருள், தேர்வு செய்யப்பட்டுள்ளது. உலகளாவிய

நிலையில் பரந்துவாழும் தமிழறிஞர்கள் பலரும் இந்த ஆய்வுக் கருப்பொருளால் வசீகரிக்கப்பட்டு இந்த ஆய்வு மாநாட்டில் பங்கெடுத்து பயன்விளைப்பர் எனப் பெரிதும் நம்புகின்றோம்.

இந்த ஆய்வு மாநாட்டின் தொடக்க நிகழ்வுகள் மற்றும் கௌரவிப்புகள் காலையிலும் ஆய்வு அமர்வுகளை அதே நாளின் மாலையிலும் நடத்துவதென்று திட்டமிடப்பட்டுள்ளது. திறப்புரைக்காக வைணவ இலக்கியப் பாரம்பரியத்தில் தாடனமுள்ள பேராசிரியர் ஒருவரைத் தமிழ்நாட்டிலிருந்து தருவிப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. கௌரவிப்பு நிகழ்வின் வரிசையில் பக்தி இலக்கியங்களுக்கு உரைசெய்த உரையாசிரியர்கள், தமிழ்மொழி வளர்ச்சிக்கு வளம் சேர்த்து ஓய்வுபெற்றுள்ள மூத்த பேராசிரியர்கள் இம்மாநாட்டில் கௌரவிக்கப்படவுள்ளனர். இந்த ஆய்வுமாநாட்டையொட்டிய போட்டி நிகழ்வுகளாக, வடக்கு மாகாணப் பாடசாலை உயர்தர மாணவர்களுக்கிடையே பேச்சுப்போட்டியினையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் மற்றும் சேர் பொன் இராமநாதன் கட்புல மற்றும் ஆற்றுகைகள் பீட மாணவர்களுக்கிடையே தமிழறிவுப்போட்டிப் பரீட்சையினையும் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

**ஆய்வுத்தடங்கள்**

1. மொழியியல்
2. இலக்கியம்
3. இதிகாச காவியமரபு
4. உரைமரபு
5. எடுத்துரைப்பியல்
6. யாப்பியல்
7. சிற்றிலக்கியம்
8. தொன்மம்
9. உளவியல்
10. சமூகவியல்
11. தத்துவவியல்
12. மொழிபெயர்ப்பியல்
13. சைவ, வைணவ மரபு
14. நாட்டார் வழக்காற்றியல்
15. பண்பாடு
16. ஒப்பியல்
17. கலை
18. எதிர்ப்பிலக்கியம்

**கட்டுரை அமையவேண்டிய முறை:**

ஆய்வுக்கட்டுரை சொந்த முயற்சியாக இருப்பதுடன் இதற்கு முன்னர் வேறெங்கும் பிரசுரிக்கப்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| மொழிமூலம் | : | தமிழ் |
| எழுத்துரு | : | கணினி அச்சில் பாமினி எழுத்துருவில் அமைய வேண்டும். |
| | | (Bamini எழுத்துருவில் word மற்றும் Pdf கோப்புருவில்) |

**எழுத்துக்களின் அளவு:**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | 14 |
| ஆய்வுச்சுருக்கம் | : | 10 |
| கட்டுரை | : | 12 |
| வரிகளின் இடைவெளி | : | 1.5 |
| தாள் | : | A4 |
| பக்க அளவு | : | 10 பக்கங்களுக்கு மேற்படாமல். |

**கட்டுரையின் அமைப்பு:**

தலைப்பு

ஆசிரியர்(கள்) பெயர்

பதவிநிலை

முகவரி

தொலைபேசி இலக்கம்

மின்னஞ்சல் முகவரி

100 சொற்களுக்கு மேற்படாத ஆய்வுச்சுருக்கம், திறவுச்சொற்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக முழுமையான ஆய்வுக்கட்டுரை அமையவேண்டும்.

அடிக்குறிப்பு, உசாத்துணை 'ஹாவாட்' (HAVARD) முறையில் அமைதல் வேண்டும்

**அனுப்பவேண்டிய முகவரி:**

| | | |
|---|---|---|
| மின்னஞ்சல் | : | ict2023tamil@gmail.com |
| தபாலில் | : | பேராசிரியர். கி. விசாகரூபன்<br>சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் தலைவர்,<br>தமிழ்த்துறை, கலைப்பீடம்,<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,<br>இலங்கை. |

**கட்டுரை அனுப்புவதற்கான கால எல்லை:**

ஆய்வாளர் ஆய்வுத்தலைப்பு மற்றும் ஆய்வுச் சுருக்கத்தினை ict2023tamil@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு 2025 பங்குனி 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும். தலைப்பு தொடர்பிலான ஒப்புதல் கிடைத்தபின்னர் முழுமையான கட்டுரையினை 2025 சித்திரை 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பு | : | 30 சித்திரை 2025 |
| பதிவுக்காலம் | : | 10 வைகாசி 2025 |

**பதிவுக்கட்டணம்:**

| | | |
|---|---|---|
| உள்ளூர் ஆய்வாளர்கள் | : | 4000.00 |
| பட்டப்படிப்பை மேற்கொள்ளும் உள்நாட்டு மாணவர்கள் | : | 1000.00 |
| வெளிநாட்டு ஆய்வாளர்கள் | : | 50 அமெரிக்க டொலர். |

**கட்டணம் செலுத்தும் முறை:**

நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் பெயரிற்கு மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளையின் 162 – 1 – 003 – 1 – 0000891 என்னும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்யவும்.

இலங்கைக்கு வெளியே இருந்து அனுப்பப்படும் கட்டணங்களுக்கு Swift Code: ‘PSBKLKLX’ என்பதைப் பயன்படுத்தவும்.

| | |
|---|---|
| Bank Name: | People's Bank, Sri Lanka |
| Branch Code: | 162 |
| Swift Code: | PSBKLKLX |
| Bank Account Name: | University of Jaffna |
| Bank Account Number: | 162100310000891 |
| Reference No: | 040002282101060 |

வங்கியில் பணஞ்செலுத்திய பற்றுச்சீட்டின் நகலை ict2023tamil@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கும், மூலப்பிரதியை தலைவர், தமிழ்த்துறை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை என்னும் முகவரிக்கும் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

**மாநாட்டுக்குழு:**

1. பேராசிரியர். சி. ரகுராம் (கலைப்பீடாதிபதி)
2. பேராசிரியர். கி. விசாகரூபன் (சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை)
3. பேராசிரியர். (செல்வி). செ. சிவசுப்பிரமணியம்
4. திரு. ஈ. குமரன் (சிரேஷ்ட விரிவுரையாளர்)
5. திருமதி. ந. செல்வ அம்பிகை (சிரேஷ்ட விரிவுரையாளர்)
6. திரு. க. அருந்தாகரன் (சிரேஷ்ட விரிவுரையாளர்)
7. திரு. த. அஜந்தகுமார் (விரிவுரையாளர்)
8. திரு. சி. செரஞ்சன் (விரிவுரையாளர்)

**ஆலோசனைக்குழு:**

1. பேராசிரியர். அ. சண்முகதாஸ் (வாழ்நாட் பேராசிரியர், தமிழ்த்துறை)
2. கலாநிதி. எஸ். சிவலிங்கராஜா (ஓய்வுநிலைப் பேராசிரியர், தமிழ்த்துறை)
3. கலாநிதி. ஆறு. திருமுருகன் (பேரவை உறுப்பினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
4. பேராசிரியர். ம. இரகுநாதன் (வாழ்நாட் பேராசிரியர், தமிழ்த்துறை)
5. பேராசிரியர். வ. மகேஸ்வரன் (வாழ்நாட் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்)
6. பேராசிரியர். கே. ரீ. கணேசலிங்கம் (தலைவர், அரசறிவியல்துறை)
7. பேராசிரியர். (திருமதி). வி. பவநேசன் (தலைவர், இந்துநாகரிகத்துறை)
8. கலாநிதி. தி. செல்வமனோகரன். (சிரேஷ்ட விரிவுரையாளர், சைவசித்தாந்தத்துறை)
9. திருமதி. சா. அருளானந்தம் (சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை)
10. திரு. சாமிநாதன் விமல் (சிரேஷ்ட விரிவுரையாளர், மொழியியல்துறை)
11. திரு. இ. இராஜேஸ்கண்ணன் (சிரேஷ்ட விரிவுரையாளர், சமூகவியல்துறை)

……………………………

பேராசிரியர். கி. விசாகரூபன்

தலைவர், தமிழ்த்துறை.